## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 5/2017 | பி.வா.சா. | : 1 |
| பெயர் | : ராமசாமி | த/பெ. | : ஆறுமுகம் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : குட்டுர் |
| தேதி | : 23.07.2025 | வயது | : 62 /2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாவேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

பி.வா.சா.ஆ.1 – 06.03.2017, 25.07.2023, 28.06.2024 தேதிய 2ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை–3) அசல்–1, கணிணி நகல்–2 ஆகவும்,

பி.வா.சா.ஆ.2 – 07.12.1966ம் தேதிய சர்வே எண்.183/5 சொத்தை 2ம் பிரதிவாதியின் தந்தை ஆறுமுகம் மற்றும் அவரின் சகோதரர்கள் பெயரிலுள்ள கிரைய பத்திரம் மற்றும் அதன் 20.08.2024ம் தேதி வில்லங்க சான்றிதழ் – அசல் ஆகவும்,

மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 குறியீடு செய்யப்படுகிறது.

வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 23.07.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.07.23 16:11:43 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.